பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 31 திங்கட்கிழமை 16.08.2021 கதிர் 150

## தனிமைப்படுத்தல் சட்டம் மீறல் மீறிய மேலும் 253 பேர் கைதாகினர்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறியமை, முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைப் பேணாமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் மேலும் 253 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண ஊடகங்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

☞2

# அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்!

## பவித்ராவின் பதவி பறிப்பு; சுகாதார அமைச்சரானார் கெஹலிய டலஸுக்கு ஊடகத்துறை; நாமலுக்கு மேலும் ஓர் அமைச்சுப் பதவி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை இன்று மீண்டும் மறுசீரமைக்கப்பட்டது. இதன்படி முக்கிய ஏழு அமைச்சு விடயதானங்கள் கைமாற்றப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த பவித்ரா வன்னியாராச்சியிடமிருந்து அந்த அமைச்சுப் பறிக்கப்பட்டு கெஹலிய ரம்புக்வெலவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷவுக்கு இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சுகளுக்கு மேலதிகமாக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றங்கள் செய்யப்பட்ட ஏழு அமைச்சுக்களின் விவரம் வருமாறு:-

☞2

### கொவிட் கட்டுப்படுத்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட

# சுமந்திரனின் சட்டமூலத்தை முன்நகர்த்த அரசு தீர்மானம்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

**கொழும்பு, ஓகஸ்ட் 16**

**கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு வசதியாக, அது தொடர்பான நடவடிக்கைகளுக்கு சட்ட அந்தஸ்து அளிக்கும் வகையில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சமர்ப்பித்த தனிநபர் சட்டமூலத்தை முன்நகர்த்தி சட்டமாக்குவதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது.**

**நாடாளுமன்ற அமர்வுகள் தொடர்பாக தீர்மானிப்பதற்காக இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் நாடாளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டிருக்கின்றது.**

**'கொவிட் - 19 தற்காலிக ஏற்பாடுகள் சட்டமூலம்' என்று அரசு சமர்ப்பித்த சட்டமூலம் ஒன்று நாளை நாடாளுமன்றுக்கு வருகின்றது. கொவிட் தொற்றுக் காலத்தில் இணையத்தில் நீதிமன்ற அமர்வுகளை நடத்தவும், நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்பான கால அவகாசங்களை கொவிட் தொற்று நெருக்கடிக்கு ஏற்ப தள்ளிப் போவதை அங்கீகரிக்கவும் வழி செய்யும் விதத்தில் இந்தச் சட்டமூலம் அமைந்திருக்கின்றது.**

☞2

## இறுக்கமாகக் கண்காணிக்கப்படும் தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகள்

### பதிவுத் திருமணத்தில் 9 பேருக்கு மட்டும் அனுமதி

தனிமைப்படுத்தப்பட்ட உத்தரவுகள் இன்று முதல் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் காலகட்டத்தில், சம்பந்தப்பட்ட உத்தரவுகள் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மதித்து, பொது மக்கள் வீட்டினுள் இருக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே, நாளை முதல்

☞2

## புதிய பொலிஸ் பேச்சாளராக நிஹால் தல்துவ நியமனம்



இலங்கையின் புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளராகச் செயற்பட்டு வந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹணவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

☞2

### கௌதாரிமுனையிலிருந்து கொழும்புக்கு

## மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் மடக்கிப் பிடிப்பு

(ந.லோகதயாளன்)

பூநகரி பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அத்தியாவசிய சேவைகள் எனப் போடப்பட்ட பதாகையுடன் கௌதாரிமுனையிலிருந்து கொழும்புக்கு மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட கூலர் ரக வாகனம் மடக்கிப்

☞2

## மாகாணங்களைக் கடந்து பயணிக்க முற்பட்ட 361 பேர் திருப்பி அனுப்பல்

மாகாணங்களைக் கடந்து நேற்றுப் பயணிக்க முற்பட்ட 361 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில்

☞2

## ரிஷாத்தின் மைத்துனர் பிணையில் விடுவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் கடந்த 2016ஆம் ஆண்டில் பணியாற்றிய யுவதி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கடந்த ஜூலை 23 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

☞2

## வவுனியாவில் இருவர் கொரோனாவால் சாவு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் இருவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இருவரே நேற்றிரவு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர்.

ஓலுமடு பகுதியைச் சேர்ந்த 87 வயதுடைய பெண் ஒருவரும், இராசேந்திரங்குளம் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

இருவரினதும் சடலங்களை சுகாதார முறைப்படி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## இறுக்கமாகக்...........

திருமணத்துக்குச் சட்டப்படி அனுமதி இல்லை என்றும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களுக்கு மட்டுமே பதிவுத் திருமணத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாளை முதல் வரவேற்பு மண்டபங்கள் அல்லது வீட்டிலோ திருமண விழாக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படாது என்றும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் வீட்டில் கலந்துகொண்டு திருமணப் பதிவு நடைபெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, மணமகன், மணமகள், அவர்களின் பெற்றோர், பதிவாளர் மற்றும் இரண்டு சாட்சிகள் பதிவுத் திருமண நிகழ்வில் கலந்துகொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ரிஷாத்தின்..........

இந்நிலையில், இன்று அவர் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்ட போது, அவரைப் பிணையில் விடுவிக்க நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இதன்படி 5 லட்சம் ரூபா சரீரப் பிணையில் சந்தேகநபர் விடுவிக்கப் பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபருக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை விதித்துள்ளதுடன், சந்தேகநபரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்திடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமி ஹிஷாலினியின் மரணத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளின்போது, 2016 ஆம் ஆண்டில் அந்த வீட்டில் பணியாற்றிய 22 வயது யுவதி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருந்தன.

இதன்படி அவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

## சுமந்திரனின்..........

எனினும், கொவிட் தொற்றுத் தடுப்புத் தொடர்பான கட்டுப்பாடுகள், விதிமுறைகள், மட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டங்கள் ஏதும் இல்லை. இந்தச் சட்டங்கள் இல்லாமலேயே இந்த விடயங்கள் சட்டமுறையற்ற விதத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என இன்றைய கட்சித் தலைவர்கள் சந்திப்பிலும் மீண்டும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதை நிவிர்த்திப்பதற்காக கடந்த வருடம் ஒக்ரோபரில் சுமந்திரன் எம்.பி. தனிநபர் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

அது சட்டமா அதிபர் திணைக்களத்தில் சுமார் ஆறு மாதகாலம் தேங்கிக் கிடந்த பின்னர் கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றுக்கு வந்து முதல் வாசிப்புடன் நிற்கின்றது.

முதல் வாசிப்பு முடிந்து ஒரு வாரம் கடந்தும் யாரும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை.

அதனால் அந்தச் சட்டமூலத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சட்டமாக்க முடியும் என்று இன்றைய கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய ஒரு சட்டமூலம் நிறைவேற்றப்படுவது அவசியமானது என நீதி அமைச்சர் அலி சப்றி கூட்டத்தில் தெரிவித்தார்.

அதே போன்ற கருத்தை அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் இன்றைய கூட்டத்தில் முன்வைத்தார்.

எனவே, நீதியமைச்சர் அலி சப்றி உடனடியாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியுடனும், பிற சட்ட அதிகாரிகளுடனும் ஒரு கூட்டத்தைக் கூட்டி இந்தத் தனிநபர் சட்ட மூலத்தை மெருகுபடுத்தி, அதனை அரசுத் தரப்பின் ஆதரவுடனான சட்டமூலமாக இரண்டாவது வாசிப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறியவந்தது. (உ)

## மஞ்சள்...........

பிடிக்கப்பட்டது.

அத்தியாவசிய பொருள்களுடன் சேர்த்து மறைத்துக் கொண்டு செல்லப்படவிருந்த மஞ்சள் மூடைகளையே பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த மஞ்சள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கிளிநொச்சி கௌதாரிமுனைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வாகனத்தைக் கைப்பற்றிய பொலிஸார், வாகன சாரதி மற்றும் உதவியாளரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு மற்றும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

43 வயது மற்றும் 23 வயதானவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய.........

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ ஒரு சட்டத்தரணியும் ஆவார். இவர் முன்னாள் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சராவார்.

## தனிமைப்படுத்தல்...........

இதற்கமைய கடந்த வருடம் ஒக்டோர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 54 ஆயிரத்து 612 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சரவையில்..........

01) ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்

02) தினேஷ் குணவர்தன - கல்வி அமைச்சர்

03) பவித்ரா வன்னியாரச்சி - போக்குவரத்து அமைச்சர்

04) கெஹலிய ரம்புக்வெல - சுகாதார அமைச்சர்

05) காமினி லொக்குகே - மின்சாரத்துறை அமைச்சர்

06) டலஸ் அழகப்பெரும அவர்கள் - ஊடகத்துறை அமைச்சர்

07) நாமல் ராஜபக்ஷ - இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சர்.

## மாகாணங்களைக்.........

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த 361 பேர் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணிப்பதற்கு முயற்சித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணக்கட்டுப்பாடுகளை மீறிப் பயணிப்போரைக் கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.






# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் -onlinekathir.com

## வழி காட்டலா? குழி வெட்டலா?

தமிழ் அரசியல் தலைவர்களுக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை, அதற்கான தீர்வு என்பன முக்கியமானவை அல்ல. தமது அரசியல் எதிரி தோற்க வேண்டும், பின்னடைவு காண வேண்டும், அதற்காக எதுவும் செய்வோம், இனம் எக்கேடு கெட்டாலும் கெட்டுப் போகட்டும் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடு; சிந்தனை; எண்ணம்.

தனது தாயகத்தில் பேரழிவின் விளிம்பில் நிற்கின்றது தமிழினம். இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள், ஏதோ ஓர் எதிர்கால தலைவன் வந்து தமிழினத்தை மீட்பான், இரட்சித்துக் காப்பாற்றுவான் என்று எண்ணியிருக்கலாம், நம்பி இருக்கலாம் என்றால் அதுவரை தமிழினம் ஈழத் தமிழர் தாயகத்தில் தனித்துவமாக – தனக்குரிய காலாதிகால பண்பியல்புகளோடு, தப்பிப் பிழைக்குமா என்ற சந்தேகம் வந்துவிட்டது. அத்துணை வேகத்தில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் விஸ்வரூபம் எடுத்து, தமிழர் தாயகத்தையும் அதன் தனித்துவத்தையும் கபளீகரம் செய்து வருகின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னர் நீர்கொழும்பிலும், புத்தளத்திலும், அனுராதபுரத்திலும் தமிழர் சுவடே – தனித்துவச் சிறப்பே –அழிக்கப்பட்டுவிட்டது. கிழக்கில் மிகக் கணிசமான பங்கை இழந்துவிட்டோம். வவுனியாவின் வடக்கையும் தாண்டி அந்தக் கபளீகரம் முன்நகர்ந்து கொண்டிருக்கின்றது. முல்லைத்தீவிலும் கூட நிலைமை அதுதான். கிழக்கின் சூழ்நிலை வன்னிக்கு என ஆகிக்கொண்டிருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் என்றோ ஒரு நாள், யாரோ ஒரு தலைவன், மீண்டும் முகிழ்த்தெழுந்து வந்து காப்பாற்றுவான் என்ற கனவுச் சிந்தனையில் நாம் மூழ்கிக் கிடக்க முடியாது.

குறைந்தபட்சம் ஒரு தீர்வு – இடைக்கால ஏற்பாடு– செய்தாக வேண்டும். இனத்தையும் இருப்பையும் தக்க வைப்பதற்கு அதைச் செய்யத் தவறுவோமேயானால் பேசுவதற்கும் வாழ்வதற்கும் தனித்துவமான தமிழர் தாயகம் இங்கு எஞ்சாது. அதுதான் இன்றைய நெருக்கடி நிலைமை. யதார்த்தபூர்வமான இக்கட்டு.

இந்த யதார்த்தத்தில் சிந்திக்காமல், அரசியல் வீம்புத்தனத்துக்காக கனவுலகில் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள் மெத்தப் படித்த நமது அரசியல் தலைவர்கள். நாம் தலைவர்கள் என்று தேர்ந்தெடுத்த எங்கள் பிரதிநிதிகள்.

கூட்டாட்சி அரசமைப்புக்கு இணங்கும் அரசுடன் மட்டும்தான் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பற்றி பேசவேண்டும் என்று பெரும் தத்துவம் பேசி இருக்கின்றார் நமது நாடாளுமன்றப் பிரதிநிதி நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். மிக அருமையான யோசனை. உச்சமான மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பு. ஆனால், இது காரிய சாத்தியமான விடயம்தானா என்பதை இத்தகைய அறிவிப்பைக் கொடுக்க முன்னர் கற்றறிந்த அவர் சிந்தித்திருக்க வேண்டும். தமது அரசியல் எதிரியான சுமந்திரனை வைய வேண்டும், அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தி சிக்கலில் மாட்ட வைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்திற்காக அவர் இப்படி யதார்த்தபூர்வமற்ற அறிக்கையை வெளியிடுவாராயின் அவர் அதன் மூலம் வேறு இரண்டு வேலைகளையும் செய்கின்றார் என்று அர்த்தம்.

ஒன்று – தமிழ் மக்களின் எதிர்காலத்தை படுமோசமான குழிக்குள் தள்ளுகின்றார். அடுத்தது– தமிழ் மக்களை அவர் முட்டாள்களாக்க முயலுகின்றார்.

மயிலே மயிலே இறகு போடு என்றால் மயில் இறகு போடப் போவதில்லை. பிடுங்கித்தான் எடுக்க வேண்டும். சிங்களப் பேரினவாதம் எத்தகையது என்பதை அவரே கூறியிருக்கிறார். அந்தப் பேரினவாத மயில், கூட்டாட்சி அரசமைப்பு என்ற இறகைத் தானாக விரும்பி வந்து நமக்கு தரப்போவதில்லை. பிடுங்கி எடுக்கும் நிலையிலும் தமிழினம் இன்று இல்லை. இப்போதைக்கு அத்தகைய நிலை வருவதற்கு வாய்ப்புண்டு என்று எண்ணுவதற்கோ, இன்றிருக்கும் நீதியரசர் விக்னேஸ்வரன் போன்ற பிற தலைவர்களால் அப்படி ஒரு நிலையை ஏற்படுத்த முடியும் என்று நம்புவதற்கோ இடமே இல்லை. அவ்வாறாயின் தீர்வை தமிழர்கள் எங்ஙனம் பெறுவது?

எங்களுடைய அகப்பலமாக உருவெடுத்த விடுதலைப் புலிகள் என்ற கட்டமைப்பையே நாம் இழந்து விட்டோம். ஆக மிஞ்சி இருப்பது சொற்ப எண்ணிக்கை கொண்ட நாடாளுமன்றப் பலம்தான். அதுவும் கூடத் தமிழ் தேசியத்துக்கு ஊக்கம் கொடுக்கும் பலமாக இல்லை. பலவீனமாக உள்ளது.

ஒரு காலத்தில் நமக்கு புறப் பலமாக கிடைத்த இந்தியாவையும் இழந்துவிட்டோம். இப்போது நமக்கு கிட்ட கூடிய – நமது நப்பாசை ஆக இருக்கின்ற – ஒரே புறப்பலம் இந்தியா உட்பட சர்வதேச சமூகம் மட்டுமே. அந்தப் புறப்பலத்தில் நமது பக்கத்துக்கு வரக்கூடிய பெரிய தரப்பாக நாம் எதிர்பார்க்கக் கூடியது அமெரிக்கா. அந்த அமெரிக்கா தான் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்கின்றது.

அமெரிக்கா உட்பட்ட சர்வதேசம் தான் எம்மைக் காப்பாற்ற முடியும், அது காப்பாற்ற முன்வர வேண்டும், ஆகவே அமெரிக்கா உட்பட்ட சர்வதேசத்தை வளைத்து எங்கள் பக்கம் திருப்புங்கள் என்று முழக்கமிடுகிறோம். ஆனால், மறுபுறத்தில் அத்தகைய அமெரிக்கா அழைக்கும்போது, கூட்டாட்சி அரசமைப்புக்கு உத்தரவாதம் தரும் அரசுடன்தான் பேச முடியும் என்று கூறி, அந்தப் பேச்சுக்கு போகாமல் தள்ளி விலகி விட வேண்டுமாம்.

இவர் தமிழ் இனத்துக்கு வழிகாட்டுகின்றாரா? அல்லது குழி பறிக்கின்றாரா? சுமந்திரனுக்கெனத் தாம் வெட்ட முயலும் குழியில் தமிழ் இனத்தையும் சேர்த்து விழுத்தி விட அவர் வழிகாட்டுகிறார் என்றே தோன்றுகின்றது.

# இரண்டு தடுப்பூசியும் பெற்ற 23 பேர் இதுவரை உயிரிழப்பு

இலங்கையில் கொரோனாவுக்கு எதிராக இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களில் இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டாவது தடுப்பூசி பெற்றுக்கொண்டு இரண்டு வாரங்களுக்கு பின்னர் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.

நீண்ட நாள்களாக அவர்களுக்கு இருந்த நோய்கள் காரணமாகவே அவர்கள் உயிரிழந்துள்ளனர் என அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்களுக்கு இரண்டு வாரங்களின் பின்னரே தடுப்பூசியின் நோய் எதிர்ப்பு செயற்றிறன் அதிகரிக்குமென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை,கொரோனாத் தொற்றால் இதுவரையில், 21 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதேபோல நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 800 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 700 கர்ப்பிணிகள் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய தூதரக கட்டுரை போட்டியில் வடக்கில் பரிசு பெற்றவர்கள் விவரம்

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட 'ஆசாதிகா அம்ரித் மஹோத்ஸவ்' கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தியத் துணைத் தூதரகம், வடக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகத்துடன் இணைந்து, வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியை இணைய வழியில் நடத்தியது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இருந்து முதல் மூன்று இடங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட 15 வெற்றியாளர்களுக்கும் மொத்தம் 75 ஆயிரம் ரூபா பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கான பணப்பரிசில்களை, இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் வேறோரு சந்தர்ப்பத்தில் நடைபெறும் விழாக்களில் நேரடியாக வழங்கிவைப்பார்.

அமைச்சகத்தால் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களின் விவரங்கள்:

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

முதலாம் இடம்:– செல்வி அனோஜிகா சிவகுமார் (தரம் 13, யா/இந்து மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம்:– செல்வி கம்சிகா கஜேந்திரன் (தரம் 13, யா/வயாவிளான் மத்திய கல்லூரி)

மூன்றாம் இடம்:– செல்வி சுவஸ்திகா சர்வேஸ்வரன் (தரம் 12, யா/யூனியன் கல்லூரி)

**கிளிநொச்சி மாவட்டம்**

முதலாம் இடம்:– செல்வி குமார் கிருஷாந்தி (தரம் 12, கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்)

இரண்டாம் இடம்:– செல்வி சுப்ரமணியம் பபிதா (தரம் 13, கிளிநொச்சி இந்துக் கல்லூரி)

மூன்றாம் இடம்:– செல்வி சுதாகரன் சுவேதிகா (தரம் 12, கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்)

**முல்லைத்தீவு மாவட்டம்**

முதலாம் இடம்:– செல்வி சுப்ரமணியம் சுடர்ச்செல்வி (தரம் 13, மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)

இரண்டாம் இடம்:– செல்வி மயில்வாசன் தினேகா (தரம் 13, மு/யோகபுரம் மகாவித்தியாலயம்)

மூன்றாம் இடம்:– செல்வி சசிகுமார் ஷர்மிகா (தரம் 13, மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம்)

**மன்னார் மாவட்டம்**

முதலாம் இடம்:– செல்வி றசிக்குமார் சசிகலா (தரம் 11, மன்/முருங்கன் மகா வித்தியாலயம்)

இரண்டாம் இடம்:– செல்வி டியோன்மேரி யுஜிதா (தரம் 11, மன்/முருங்கன் மகா வித்தியாலயம்)

மூன்றாம் இடம்:– செல்வி சுதாகரன் சுதர்ஷிகா (தரம் 11, மன்/முருங்கன் மகா வித்தியாலயம்)

**வவுனியா மாவட்டம்**

முதலாம் இடம்:– செல்வி மோகனப்பிரதா கோணேஷ்வரன் (தரம் 12, வவு/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)

இரண்டாம் இடம்:– செல்வி குமுதினி பாலையா (தரம் 13, வவு/பூந்தோட்டம் மகா வித்தியாலயம்)

மூன்றாம் இடம்:– செல்வி ஞா. ரஜீந்தினி (தரம் 12, வவு/புதுக்குளம் மகா வித்தியாலயம்)

# தேசிய கபடி அணி முதல்தெரிவில் கிளிநொச்சி யுவதிகள் இடம்பிடிப்பு



இலங்கையின் தேசிய கபடி அணியில் முதற்கட்ட தெரிவில் கிளிநொச்சி யுவதிகள் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற தேசிய கபடி அணிக்கான முதற்கட்ட தெரிவில் நாடளாவிய ரீதியில் 25 பேர் கலந்துகொண்டனர்.

இதில் 18 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 18 பேரில் கிளிநொச்சி யுவதிகள் மூவரும் அடங்குகின்றனர்.

கிளிநொச்சி சிவநகர் பாடசாலையின் பழைய மாணவிகளான இவர்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

ஆரம்பக் கட்டப் பயிற்சியை ஆசிரியர் இராமநாதன் பரஞ்சோதியிடம் பெற்ற இவர்கள் கடந்த காலங்களில் தேசிய மட்ட போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள ஆசிய மட்ட கபடி போட்டிக்கான இலங்கை அணியின் முதற்கட்ட தெரிவில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 18 பேரிலிருந்து இறுதியாக 12 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தத் தெரிவிலும் இவர்கள் தேசிய அணிக்குள் உள்வாங்கப்படுவதற்கான அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆப்கானில் போர் முடிவுக்கு வந்தது



## தலிபான்கள் அறிவிப்பு

அமெரிக்காவின் இரட்டை கோபுரத் தாக்குதலுக்கு மூளையாக இருந்த அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவரான ஒசாமா பின் லேடனுக்கு அடைக்கலம் அளித்த குற்றத்துக்காக தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா தனது இராணுவப்படைகளை 2001இல் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பி வைத்தது.

அமெரிக்கப் படைகளின் உதவியுடன் ஆப்கானிஸ்தான் அரசு தலிபான்களிடம் இருந்து நாட்டை முழுமையாக மீட்டது.

தலிபான்கள் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. தலிபான்களை முழுமையாக ஒழித்து கட்ட வேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருந்ததால் தனது படைகளை அங்கேயே நிறுத்தி வைத்தது. ஆனால் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் ஆகியும் அமெரிக்கப் படைகளால் தலிபான்களை முழுமையாக ஒழிக்க முடியவில்லை.

எனவே முடிவில்லாமல் நீண்டு கொண்டே செல்லும் இந்த போரில் இருந்து விலக அமெரிக்கா முடிவு செய்தது. அதன்படி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தலிபான் தீவிரவாத அமைப்புடன் அமெரிக்கா ஒரு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியது.

அதில் ஆப்கானிஸ்தானில் பிற தீவிரவாத அமைப்புகளுக்கு புகலிடம் அளிக்கமாட்டோம் என தலிபான்கள் உறுதி அளித்தமையைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் இருந்து தனது படைகளை திரும்பப் பெற அமெரிக்கா ஒப்புக்கொண்டது.

அதன்படி கடந்த ஜூன் மாத பிற்பகுதியில் இருந்து அமெரிக்க படைகள் அங்கிருந்து வெளியேறி வருகின்றன. 90 சதவீத அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி விட்ட நிலையில், இதுவரை பதுங்கியிருந்த தலிபான்கள் பாயத் தொடங்கினர்.

அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கிய சில வாரங்களிலேயே ஆப்கானிஸ்தானின் பல்வேறு முக்கிய நகரங்களையும், அண்டை நாடுகளுடனான எல்லைப் பகுதிகளையும் தலிபான்கள் கைப்பற்றினர். அதிலும் குறிப்பாக கடந்த 10 நாள்களில் ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான மாகாணங்களின் தலைநகரங்களை தலிபான்கள் தங்கள் வசம் ஆக்கினார்.

நேற்று தலிபான்கள் காபூல் நகருக்குள் நுழைந்தனர். எனினும் படைப் பலத்தைப் பயன்படுத்தி காபூலை கைப்பற்ற விரும்பவில்லை என தெரிவித்த தலிபான்கள் அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்தை விரும்புகிறோம் எனவும் கூறினர்.

அதன்பின்னர் காபூல் நகரம் தங்கள் வசமானதைத் தொடர்ந்து, வன்முறையை உடனடியாக நிறுத்தும்படி போராளிகளுக்கு தலிபான் அமைப்பு உத்தரவு பிறப்பித்தது. ஆப்கான் இராணுவ வீரர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. விமான நிலையங்கள், மருத்துவமனைகள் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்படும் என்றும், அவற்றுக்கான விநியோகம் நிறுத்தப்படாது என்றும் தலிபான் தீவிரவாத அமைப்பு அறிவித்தது.

அதேபோல் வெளிநாட்டவர்கள் விரும்பினால் காபூலை விட்டு வெளியேறலாம் அல்லது அவர்கள் தொடர்ந்து காபூலில் இருக்க வேண்டுமெனில் தங்களை தலிபான் அதிகாரிகளிடம் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்றும் தலிபான்கள் அறிவித்தனர்.

எனினும் காபூலைதலிபான்கள் கைப்பற்றியதால் பீதியடைந்த உள்ளூர் அரசு அதிகாரிகள் அனைவரும் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதற்காக விமான நிலையங்களில் குவிந்துள்ளனர். அதேபோல் காபூல் நகரைச் சேர்ந்த பொதுமக்களும் உயிருக்கு பயந்து அண்டை நாடான பாகிஸ்தானை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

இதனிடையே ஆட்சி மாற்றம் தொடர்பாக தலிபான் பயங்கரவாத அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் ஆப்கானிஸ்தான் அரசு அதிகாரிகளுக்கும் இடையே அதிபர் மாளிகையில் நடைபெற்ற பேச்சுக்குப் பின்னர் அதிபர் அஷ்ரப் கனி பதவி விலகினார் எனத் தகவல் வெளியானது.

தலிபான்கள் காபூலை நெருங்கும்போதே அதிபர் அஷ்ரப் கனி நாட்டை விட்டு வெளியேறினார். மேலும் துணை அதிபர் அம்ருல்லாவும் காபூலைவிட்டு வெளியேறி விட்டார் எனவும் தகவல் வெளியானது.


இந்நிலையில், நாட்டை விட்டு வெளியேறிய சில மணி நேரத்தில் அஷ்ரப் கனி தனது பேஸ்புக் பக்கத்தில் போரில் மக்களின் இரத்தம் சிந்துவதை தவிர்க்கவே அதிபர் பதவியிலிருந்து விலகினேன். 20 ஆண்டுகளாக நாட்டைப் பாதுகாக்க என் வாழ்நாளையே அர்ப்பணித்தேன். மக்கள்தான் முக்கியம் என்பதால் பதவியை ராஜினாமா செய்தேன். நாட்டின் செழிப்பு, மரியாதையை காக்க இனி தலிபான்கள்தான் பொறுப்பு எனக் கூறியுள்ளார்.

இதனிடையே அமெரிக்காவில் ஆப்கானில் இருந்து படைகள் விலக்கிக்கொள்ளப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதி மாளிகை முன் ஜோ பைடனுக்கு எதிராக மக்கள் கோஷம் எழுப்பி தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அதிபர் மாளிகைக்குள் நுழைந்த தலிபான்கள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். அதிபர் அஷ்ரப் கனி நாட்டை விட்டு வெளியேறியமையை அடுத்து தலிபான்கள் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். முன்னாள் வெளியுறவு மந்திரி அலி அகமது தலைமையில் 6 மாதங்களுக்கு இடைக்கால அரசை அமைக்க முடிவு செய்யப்பட்டதாகவும் தகவல் வெளியானது.

தலிபானின் அரசியல் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம் கூறும் போது, தனித்தனியாக வாழ விரும்பவில்லை ஆப்கானிஸ்தானில் புதிய அரசாங்கம் அமைப்பது குறித்து விரைவில் தெளிவுபடுத்தப்படும். கடவுளுக்கு நன்றி, நாட்டில் போர் முடிந்துவிட்டது. நாங்கள் தேடியதை நாங்கள் அடைந்துவிட்டோம். இது நமது நாட்டின் சுதந்திரம் மற்றும் நமது மக்களின் சுதந்திரம். யாரையும் குறிவைத்து உங்கள் நிலங்களைப் பயன்படுத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம், மற்றவர்களுக்கு தீங்கு செய்ய நாங்கள் விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

# ஹைதியில் நிலநடுக்கம் இதுவரை 1,297 பேர் சாவு



வட அமெரிக்க கண்டத்தின் கரீபியன் கடலில் உள்ள தீவு நாடான ஹைதியின் தெற்மேற்கு பகுதியில், நேற்று முன்தினம் இரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் கடற்கரை நகரமான லெஸ் கெயஸ் குலுங்கியது. இதனால் மக்கள் அலறியடித்தபடி வெளியில் ஓடினர். நகரம் முழுதும் ஒரே கூச்சலும், குழப்பமுமாக இருந்தது.

இந்த நிலநடுக்கத்தில் சிக்கிப் பலியானவர்களின் என்ணிக்கை தற்போது வரை 1,297ஆக அதிகரித்துள்ளது. 2,800இற்கும் மேற் பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். மீட்புப் பணிகள் அங்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதைத் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு அவசர கால நிலையை பிரதமர் ஏரியல் ஹென்றி பிரகடனப் படுத்தியுள்ளார்.

# மலேசிய பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார் முகைதின்

மலேசியாவில் கூட்டணி அரசில் ஏற்பட்ட குழப்பத்தால் பிரதமர் மகாதீர் கடந்த ஆண்டு பதவி விலகியமையை தொடர்ந்து, புதிய பிரதமராக முகைதின் யாசின் பதவி ஏற்றார். இந்த நிலையில், கொரோனா காரணமாக கடந்த ஜனவரி மாதம் பிறப்பிக்கப்பட்ட அவசர நிலையை மன்னரின் ஒப்புதல் இல்லாமலேயே பிரதமர் முகைதின் யாசின் திரும்பப்பெற்றமை அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதைத் தொடர்ந்து பிரதமர் முகைதின் யாசின் தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகித்து வந்த ஐக்கிய மலாய் தேசிய அமைப்பு கூட்டணியிலிருந்து விலகியது. இதனால் பிரதமர் முகைதின் யாசின் அரசு பெரும்பான்மை பலத்தை இழந்தது.

மலேசிய அரசியலமைப்பு சட்டத்தின்படி ஆளும் அரசு பெரும்பான்மை இழந்தால் பிரதமர் உடனடியாக பதவி விலகவேண்டும். ஆனால் பிரதமர் முகைதின் யாசின் தனது அரசுக்கு பெரும்பான்மை இருப்பதாகவும் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தை கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க உள்ளேன் எனவும் கூறி வந்தார்.



இந்த நிலையில் திடீர் திருப்பமாக மலேசிய பிரதமர் முகைதின் யாசின் இன்று ராஜினாமா செய்துள்ளார். அந்நாட்டு மன்னரை நேரில் சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை அவர் வழங்கினார். ராஜினாமா கடிதத்தை அளித்து விட்டு வெளியே வந்த முகைதின் யாசின் பத்திரிகையாளர்களைச் சந்திப்பதை தவிர்த்து விட்டார்.

# ஆப்கானில் இருந்து விமானம் மூலம் 129 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்



ஆப்கானிஸ்தானில் வசித்துவந்த 129 இந்தியர்கள் முதல்கட்டமாக விமானம் மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய நிலையில், அங்கு வசித்து வந்த 129 இந்தியர்கள் எயார் இந்தியா விமானம் மூலமாக டெல்லி திரும்பினர். ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இனிவரும் நாள்களில் ஒருவேளை ஆப்கானில் நிலைமை மோசமடையும் பட்சத்தில் ஆப்கானில் வசிக்கும் மற்ற இந்தியர்களையும் இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிலைமையை கவனித்து வருவதாகவும் இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்களை தாயகம் அழைத்து வருவதற்காக எயார் இந்தியா நிறுவனம் சிறப்பு விமானத்தை இயக்கியிருந்தது. நேற்று 129 பேர் இந்தியா அழைத்து வரப்பட்டனர். இதையடுத்து, இன்று மேலும் ஒரு விமானம் காபூலுக்குச் செல்லவிருந்த நிலையில் காபூல் விமான நிலையம் மூடப்பட்டதால் பிற்பகல் 12.30 க்கு டெல்லியில் இருந்து புறப்படவிருந்த விமானத்தை இயக்கமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து எயார் இந்தியா நிறுவனமும் தகவல் வெளியிட்டுள்ளது. இதனால், அங்கு சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான இந்தியர்களை மீட்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

காபூல் விமான நிலையத்தில் ஆப்கான் மக்கள் உட்பட பலர் ஒரே நேரத்தில் வெளிநாடு செல்லக் குவிந்தமையால் அங்கு பரபரப்பு நிலவுகிறது. அங்கு நடந்த துப்பாக்கிச்சூட்டில் சிலர் உயிரிழந்தனர் எனவும் தக வல்கள் வெளியாகியுள்ளன.

ஒருமுறை பயன்படுத்தப்படும்

## பிளாஸ்டிக் பொருள்களுக்கு இந்தியா முழுவதும் தடை



ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழி (பிளாஸ்டிக்) பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, பயன்பாடு, விநியோகம், தேக்கி வைத்தல் போன்றவைக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பயன்பாடு காரணமாக சுற்றுச்சூழல் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் கழிவுகள் இறுதியாக கடலை அடைந்து நீர்வாழ் உயிரினங்களின் வாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சுற்றுச்சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்க பல்வேறு நாடுகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இந்நிலையில், இந்தியாவில் 2022 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி முதல் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தத்தக்க பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி, இறக்குமதி, விநியோகம், தேக்கிவைத்தல், பயன்பாடு போன்றவைக்குத் தடை விதிக்கப்படுவதாக மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவ நிலை அமைச்சகம் அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட காது குடையும் குச்சி, பிளாஸ்டிக் கொடிகள், ஐஸ் க்ரீம் கப்புகள், ஸ்ட்ரோ, கரண்டி போன்றவையும் இந்த தடையில் அடங்கும்.

பிளாஸ்டிக் பைகளுக்கான படிமம் செப்டம்பர் 30 முதல் 50 மைக்ரோனில் இருந்து 75 மைக்ரோனாக அதிகரிக்கப்படுவதாகவும், பின்னர் அடுத்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி முதல் பிளாஸ்டிக் பைகளின் படிமனுக்கான அளவு 120 மைக்ரோனாக உயர்த் தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தடை அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து வாக்குறுதிகளையும் நிச்சயம் நிறைவேற்றுவோம்!

சட்டசபையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை



''படிப்படியாக அனைத்து வாக்குறுதிகளையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்,'' என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று 100 நாள்கள் நிறைவடைந்தமையையொட்டி சட்டசபையில் கட்சித் தலைவர்கள் கூறிய வாழ்த்துகளுக்கு பதிலளித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், படிப்படியாக அனைத்து வாக்குறுதிகளையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம் என்று தெரிவித்திருக்கிறார்.

'தி.மு.க., ஆட்சிக்கு வந்து, 100 நாள்களாகின்றன. அதற்காக என்னையும், ஆட்சியையும் பாராட்டிய அனைவருக்கும் நன்றி. தி.மு.கவுக்கு வாக்களிக்காதவர்கள் கூட, இப்போது தேர்தல் நடந்தால் ஆதரவு தரத் தயாராக இருக்கின்றனர். அந்த அளவுக்கு, ஒரு நற்பெயரைப் பெற்றிருக்கிறோம். அதை, தொடர்ந்தும் காப்பாற்ற வேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணமாக இருக்கிறது.

ஆட்சிக்கு வந்த போது, கொரோனா என்ற பெருந்தொற்று நம்மைச் சூழ்ந்திருந்தது. லட்சக்கணக்கான மக்களை காப்பாற்றியதும், அவர்களுக்கு அரவணைப்பாக இருந்ததும் தான் என்னைப் பொறுத்தவரை இந்த 100 நாள்களில் செய்த சாதனையில் பெரிதாகக் கருதுகிறேன்.

முதல் பட்ஜெட்டை நிதி அமைச்சர் தாக்கல் செய்தார். நம் அரசின் 100 ஆவது நாளில், தமிழகத்தின் வரலாற்றில் பதிவாகக் கூடியவகையில் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரி இல்லாத பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளோம்.

இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். படிப்படியாக அனைத்து வாக்குறுதிகளையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். அதில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

நாள் முழுக்க நாட்டுக்காக உழைக்கிறோம். ஒவ்வொரு வினாடியும் மக்களுக்காக சிந்திக்கிறோம். தமிழகத்தின் இழந்த பெருமையை மீட்டெடுக்க எங்களால் முடியும் என்ற நம்பிக்கை தரும் நாள்களாக இந்த 100 நாள்கள் அமைந்துள்ளன. நிதி நிலைமை மட்டும் தான் கொஞ்சம் கவலை தரக்கூடிய வகையில் இருக்கிறது. அதையும் விரைந்து சீர் செய்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

உங்களின் ஒத்துழைப்போடு சீர்மிகு தமிழகத்தை உருவாக்குவோம். இந்த பெரும் பொறுப்பை என் தோளில் சுமக்கத் தயாராகிவிட்டேன். நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு என் பயணத்தைத் தொடர்வேன். என் அரசாகத் தான் முதலில் இது உருவானது. இப்போது நான் சொல்கிறேன். இது, என் அரசு அல்ல, நம் அரசு. இதுதான் என் கொள்கை. வாழ்த்திய அனைவருக்கும் நன்றி. வாழ்த்த மனமில்லாதவர்களையும் வென்றெடுக்க அடுத்த 100 நாள்களில் இரண்டு மடங்காக நாங்கள் உழைப்போம்' என்று மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார்.



# இந்தியாவில் முதியவர்கள் அதிகமாக உள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டுக்கு இரண்டாமிடம்

இந்திய மத்திய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி, இறப்பு வீதம் குறைந்துள்ளதால் நாட்டில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கேரள மாநிலத்தில்தான் முதியவர்கள் அதிகமாக உள்ளனர். அம்மாநிலத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் முதியவர்களின் பங்கு 16.5 சதவீதமாக உள்ளது. அதற்கு அடுத்ததாக தமிழ்நாட்டில் முதியவர்களின் அளவு 13.6, பஞ்சாப்பில் 12.6, ஆந்திராவில் 12.4 சதவீதங்களாகவும் உள்ளன என இந்திய மத்திய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் முதியவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது, அங்கு பொருளாதாரம் உயர்வாகவும் மருத்துவ வசதிகள் அதிகமாகவும் இருப்பதற்கான அறிகுறிகள் எனவும் குழந்தைகள் பிறப்பு வீதம் குறைவதும் அதற்குக் காரணம் எனவும் கூறப்படுகிறது.

# புதிய ஆதீனத்திடம் மடத்தின் சொத்துக்கள் கையளிக்கப்பட்டன

மதுரை ஆதீன மடத்தின் 293 ஆவது ஆதீனமாகப் பொறுப்பேற்றுக்கொண்ட ஹரிஹரரிடம், ரகசிய அறையில் இருந்த நகைகள், சொத்து ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் போன்றவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன. ஆதீனம் அருணகிரிநாதர் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த 12 ஆம் திகதி உயிரிழந்த நிலையில், ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு தருமபுரம் ஆதீனம் தீட்சை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து மதுரை ஆதீன மடத்தின் ரகசிய அறையில் இருந்த அசையும் அசையா சொத்துகளின் பத்திரங்கள், ரொக்கப் பணம், தங்க, வைர ஆபரணங்கள் உள்ளிட்ட அனைத்தும் தருமபுரம் ஆதீனத்தின் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டன. அவையனைத்தும் கணக்கிட்டு சரிபார்க்கப்பட்ட பின்னர், 293 ஆவது ஆதீனமாகப் பொறுப்பேற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

# கிழக்கு மாகாணத்தில் 500 ஐ அண்மிக்கிறது கொரோனா மரணங்களின் எண்ணிக்கை



கிழக்குமாகாணத்தில் மரணங்களின் எண்ணிக்கை 500 ஐ அண்மிக்கிறது. நேற்றுவரை மரணங்களின் எண்ணிக்கை 447 ஆக உள்ளன. மூன்றாம் அலையில் மட்டும் 421 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

கிழக்கில் தொற்றுக்களின் எண்ணிக்கை27ஆயிரத்தைதாண்டியுள்ளது. நேற்றுவரை 27,201தொற்றுகளும் 447 மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

கிழக்குமாகாணத்தில் வழமைக்கு மாறாக கடந்த 24 மணிநேரத்தில் 618 தொற்றுகளும், 07மரணங்களும் ஏற்பட்டுள்ளன. டெல்டாவின் பிரசன்னமும் நிகழ்ந்துள்ளது. இது கிழக்கில் மற்றுமொரு பேராபத்து நெருங்குவதை கட்டியம் கூறி நிற்கிறது .

கிழக்கு மாகாணத்தில் இதுவரைகாலமும் கண்டிராத கொரோனாத் தொற்றுக்களின் பதிவு கடந்த இருதினங்களாக இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன் தினம் 618 தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளன. இது பாரிய ஆபத்துக்கான சமிக்ஞையாகக்கூட எடுக்கலாம். 618 தொற்றுக்களில் அம்பாறை சுகாதாரப்பிரிவில் 317தொற்றுக்களும், கல்முனை சுகாதாரப்பிராந்தியத்தில் 79 தொற்றுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 7 தொற்றுக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 215தொற்றுக்களும் ஏற்பட்டுள்ளன.

## சுற்று மதில் சாய்ந்ததில் இளைஞர் உயிரிழப்பு

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் வீட்டு சுற்று மதில் சாய்ந்ததில் முதலாம் பிரிவு, மண்டூர் பிரதேசத்தைச்சேர்ந்த பேரின்பராஜா பேணுஜன் வயது(18) என்பவர் இன்று அதிகாலை சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் நேற்று இறந்த நிலையில் காணப்பட்டார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை



இரவு தனது இரவுச்சாப்பாட்டை உண்டு விட்டு வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் இன்று அதிகாலை வீட்டார் அவரின் வீட்டுக்கு பின்னால் உள்ள சுற்று மதில் பக்கம் சென்றபோது சுற்று மதில் உடைந்த நிலையில் கற்களுக்குள் சிக்குண்டு

பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். தடயவியல் பொலிஸார் மற்றும் வெல்லாவெளி பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா;

# மூன்றாவது அலையில் 136 பேர் உயிரிழப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 145 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும், இதில் மூன்றாவது அலையில் மாத்திரம் 136 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் முதலாம் கட்ட தடுப்பூசியினை இரண்டு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் பேர் பெற்றுக்கொண்டுள்ளமையுடன், இரண்டாம் கட்டத் தடுப்பூசியினை அறுபதாயிரம் பேர் பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மேலும் இதுவரை இத் தொற்றினால் மரணித்தவர்களில் ஆண்கள் 82 பேரும், பெண்கள் 63 பேரும் அடங்குகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளதோடு ஓட்டமாவடி சூடுபத்தின சேனையில் கொரோனா உடலங்களை அடக்குவதற்கு இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும், புதிய இடத்தினை அரசாங்கம் அடையாளம் கண்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்

## நாவற்சோலை கடற்கரையில் 6 மீன்பிடிப் படகுகள் தீவைப்பு

திருகோணமலை – கும்புறுப்பிட்டி, நாவற்சோலை கடற்கரையில் 6 மீன்படிப் படகுகள் இனந்தெரியாத விசமிகளால், இன்று அதிகாலை 1 மணியளவில் எரியூட்டப்பட்டுள்ளன.

இதன்போது, நான்கு படகுகள் முற்றாக எரிந்துள்ளமையுடன், இரண்டு படகுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது .

இது குறித்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்துள்ளனர்.

மீனவர்களுக்கு இடையிலான பகையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு மீனவர்களுக்கு துவிச்சக்கர வண்டியும் மீன்பெட்டியும் வழங்கி வைப்பு



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுயதொழில் புரிகின்ற மீனவர்களுக்கு துவிச்சக்கர வண்டியும் மீன்பெட்டியும் வழங்கும் நிகழ்வு நேற்று கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் தலைமையில் கந்தளாய் பிரதேச சபையின் வளாகத்தில் வைத்து வழங்கி இடம்பெற்றது.

அல் ஹிக்மா பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் சுயதொழில் புரிகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற பயனாளிகளுக்கே இப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் மற்றும் அல்ஹிக்மா பவுண்டேசன் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி இபாதத்துல்லா ,உட்பட பயனாளிகளும் கலந்து கொண்டார்கள்.

## அம்பாறைப் பிராந்தியத்தில் அதிகரிக்கும் கொரோனாத் தொற்றுக்களின் எண்ணிக்கை

*கிழக்கில் அண்மைக்காலமாக அம்பாறைப் பிராந்தியத்தில் தொற்றுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த இருநாட்களில் 200 ஐ தாண்டிய தொற்றுக்கள் நேற்று அவ்வெண்ணிக்கை 317ஆக உயர்ந்துள்ளது.*

*அம்பாறைப் பிராந்தியத்தில் அதிகூடிய 102 தொற்றுக்கள் தெஹியத்தகண்டியவிலும் ,57 தொற்றுக்கள் உகனைப்பிரதேசத்திலும், 56 அம்பாறை நகரப் பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ள அதேசமயம் கல்முனைப் பிராந்தியத்தில் அதிகூடிய 19 தொற்றுக்கள் பொத்துவில் பிரதேசத்திலும் ஏற்பட்டுள்ளன. இதுவரை அம்பாறை பிராந்தியத்தில் 3 டெல்டா நோயாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டனர் எனவும் அவர்கள் சிகிச்சையில் நலமாகவே தற்சமயம் உள்ளனர். கிழக்கு மாகாணத்திற்கென கிடைக்கப்பெற்ற 9 லட்சம் தடுப்பூசிக ளில் இதுவரை 8 லட்சத்து 51 ஆயிரத்து 664 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுவிட்டன. அதாவது 80 வீதமானோருக்கு முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுவிட்டன என தெரிவிக்கப்படுகிறது.*

# ஒரேயொரு விக்கெட்டினால் பாகிஸ்தானை வீழ்த்தியது மேற்கிந்தியத்தீவுகள் அணி

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரேயொரு விக்கெட்டினால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது.

ஜமைக்காவில் நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 217 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பஃவாட் அலாம் 56 ஓட்டங்களையும் பஃஹீம் அஷ்ரப் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் மற்றும் ஜேசன் ஹோல்டர் இருவரும் தலா 3 விக்கெட்டுகளையும் ரோச் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 253 ஓட்டங்களை எடுத்து 36 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. கார்லோஸ் பிரத்வைட் 97 ஓட்டங்களையும் ஜேஸன் ஹோல்டர் 58 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஷாயின் அப்ரிடி 4 விக்கெட்டுகளையும் மொஹமட் அப்பாஸ் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 203 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 168 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டன. பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸில் அதிகபட்சமாக பாபர் அசாம் 55 ஓட்டங்களையும் அபிட் அலி 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் 5 விக்கெட்டுகளையும் கெமர் ரோச் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

168 என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் அதனைக் கடந்து ஒரு விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஜெர்மைன் பிளக்வுட் 55 ஓட்டங்களையும் கெமர் ரோச் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் ஷாயின் அப்ரிடி 4 விக்கெட்டுகளையும் ஹசன் அலி 3 விக்கெட்டுகளையும் பஃஹீம் அஷ்ரப் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக எட்டு விக்கெட்டுகளை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.




# தமிழ் நாடு பிரீமியர் லீக்கில் சம்பியனானது சேப்பாக் அணி



ரி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரில் பரபரப்பான இறுதி ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, திருச்சி வாரியர்சை தோற்கடித்து மூன்றாவது முறையாக வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

ஐந்தாவது தமிழ்நாடு பிரிமீயர் லீக் (ரி.என்.பி.எல்) ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்றிரவு நடைபெற்றது. இந்தப் பலப்பரீட்சையில் நடப்பு சம்பியன் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி, திருச்சி வாரியர்சை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற திருச்சி கப்டன் ரஹில் ஷா முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணியில் ஜெகதீசன் 58 பந்துகளில் 90 ஓட்டங்களை எடுத்தார். டி.என்.பி.எல். இறுதிப் போட்டியில் வீரர் ஒருவர் அடித்த அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும். 20 ஓவர்கள் முடிவில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி 6 விக்கெட்டுக்கு 183 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த திருச்சி வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 175 ஓட்டங்களை எடுக்க, சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று மீண்டும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஏற்கனவே 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளி லும் சம்பியன் பட்டத்தை வென்றிருந்த சேப்பாக் சூப்பர் கில்லீஸ் மூன்றாவது தடவையாகவும் வெற்றிக்கிண்ணத்தைத் தன தாக்கியிருக்கிறது.

# ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் விளையாடும்

நாட்டில் அசாதாரண சூழல் நிலவினாலும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் - ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 14 வரை நடைபெறவுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பல பகுதிகளைக் கைப்பற்றி வெகுவேகமாக முன்னேறி வந்த தலிபான்கள், ஒரே வாரத்தில் ஏறத்தாழ நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அதிபர் அஷ்ரப் கானி ஆப்கானிலிருந்து வெளியேறியுள்ளார். போர் முடிவுக்கு வந்துள்ளதாக தலிபான்கள் அறிவித்துள்ளார்கள்.

இந்தச் சூழலில் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி பங்கேற்பது குறித்து சந்தேகம் எழுந்துள்ளது. இந்தத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் உள்ள குழு 2 இல் ஆப்கானிஸ்தான் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் அசாதாரண சூழல் நிலவினாலும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி விளையாடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான் அணியின் ஊடக மேலாளர் ஹிக்மத் ஹாசன், ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், நாங்கள் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவோம். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சில நாள்களில் எங்கள் வீரர்கள் காபூலில் பயிற்சியை மீண்டும் தொடங்குவார்கள். ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுடன் இணைந்து நடைபெறவுள்ள முத்தரப்பு போட்டிக்கான இடத்தைத் தெரிவுசெய்ய இலங்கை, மலேசியா நாடுகளிடம் பேசிவருகிறோம். இலங்கையில் நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலும் பங்கேற்போம். அதேபோல உள்ளூர் ரி-20 போட்டிகளையும் நடத்தவுள்ளோம். ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான நல்ல பயிற்சியாக அது அமையும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.



# நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தியாவிலிருந்து ஊசிகள்



இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட 8 லட்சம் சிரிஞ் என்ற அகற்றக்கூடிய ஊசிகள், உத்தர பிரதேசத்தில் இருந்து இந்திராகாந்தி சர்வதேச வானூர்தி நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது, போக்குவரத்து இடையூறுக்கு மத்தியிலும், இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு புதுடில்லிக்கான பாதை போக்குவரத்து மூடப்பட்டதால், இலங்கைக்கு வழங்குவதற்காக சிரிஞ்கள் என்ற ஊசிகளை வானூர்தி நிலையத்துக்குக் கொண்டு செல்லும் வாகனம், எல்லையில் நிறுத்தப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுடெல்லி உயர் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்படுவதன் காரணமாகவே இது மேற்கொள்ளப்பட்டது.

எனினும், புதுடெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகம், இந்திய வெளியுறவு அமைச்சகத்தைத் தொடர்பு கொண்டு, டெல்லி வானூர்தி நிலையத்துக்கு, குறித்த ஊசிகளின் தொகையை எடுத்துச் செல்ல உதவுமாறு கோரியுள்ளது.

உடனடியாக செயற்பட்ட இந்திய வெளியுறவு அமைச்சு, டெல்லி பொலிஸ் தலைமையகம் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளுக்கு இதற்கான உத்தரவுகளை பிறப்பித்து, ஓகஸ்ட் 14 ஆம் திகதி குறித்த ஊசிகளை இலங்கைக்கு அனுப்ப உதவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாலவில் யானையைக் கொன்று தந்தங்கள் வெட்டி எடுப்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

யால வனவிலங்கு திணைக்களத்துக்கு உரித்தான வள்ளி மாதாகமபிரதேசத்தில், விஷமிகள் சிலர் யானை ஒன்றை கொன்று அதனது தந்தங்கள் இரண்டு மற்றும் வால் பகுதியை வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி யானை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கொல்லப்பட்டிருக்கலாம் என்று வனவிலங்குத் திணைக்கள அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

யானையின் தும்பிக்கைப் பகுதி வெட்டப்பட்டு தந்தங்கள் இரண்டும் எடுக்கப்பட்டுள்ளன என்றும், அதே போன்று யானையின் வால் பகுதியும் வெட்டப்பட்டுள்ளது என்றும் வன விலங்குத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய கொல்லப்பட்ட யானையின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

யானை கொல்லப்பட்டமை தொடர்பில் கதிர்காமம் வன விலங்கு திணைக்கள அதிகாரிகளும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரத்திலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

## கையிலிருந்த கத்தி குத்தியது

தனது வீட்டு வளாகத்திலிருந்த மரத்தை வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவர், மரத்திலிருந்து தவறி விழுந்தபோது அவரது கையிலிருந்து கத்தி கழுத்தை வெட்டியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மொனராகலை - மெதகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்தனதெனிய அராட்டுவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.சிறிசேன என்ற 06 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த நபரை மொனராகலை வைத்தியசாலைக்குக் கொண்டுச் சென்ற போதிலும் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் வாரத்தின் ஏழு நாள்களும் கொவிட் பரிசோதனை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வாரத்தின் ஏழு நாள்களும் கொவிட் பரிசோதனைகள் இடம்பெறும் என மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். சுகந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

பொது மக்களிடம் இருந்து கடந்த சனிக்கிழமை கிடைக்கப்பெற்ற முறையீடுகளை அடுத்து அதனை நிர்வத்தி செய்யும் வகையில் வைத்தியசாலை நிர்வாகம் உடனடியாக இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

வாரத்தின் ஏழு நாள்களும் காலை, மாலை நேரங்களில் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளைப் பொதுமக்கள் வழங்க முடியும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொதுமக்கள் வைத்தியசாலையின் சேவைகள் தொடர்பில் அசௌகரியங்களை எதிர்கொண்டால் அதனைத் தனது நேரடி கவனத்திற்குக் கொண்டு வருமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு காணியும் வீட்டுத்திட்டமும் வழங்கி வைப்பு







இந்தியாவிலிருந்து நாடு திரும்பி செட்டிகுளம், பெரிய புளியாலங்குளம் கிராம அலுவலகர் பிரிவில் வசித்து வந்த காணியற்ற மக்களுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காணி வழங்கி வைக்கப்பட்டதுடன், வீட்டுத்திட்டமும் வழங்கி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்று மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய நிலையில், வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியபுளியாலங்குளம் கிராமத்தில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் வசித்து வந்தோர், நீண்டகாலமாகத் திருமணம் முடிந்தும் காணிகளற்ற நிலையில் வாழ்ந்து வந்தோர் என 16 குடும்பங்களுக்கு இவ்வாறு வீட்டுத்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள அரச காணி அரை ஏக்கர் வீதம் குடியிருப்பதற்கு வழங்கி வைக்கப்பட்டதுடன், மேற்படி காணிகளில் வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், அந்த மக்களின் நீர்த்தேவைக்காக பொதுக்கிணறு ஒன்றும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் வீ.சீ.ஆர்.பபாபயோன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சண்முகநாதன், கிராம அலுவலர் அஸ்லம், ஒப்பர் சிலோன் நிறுவன முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், வீரபுரம் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2021இல் வெளியிடப்பெற்றது.